


# நகர் ஊரமைப்பு துறை(DTCP)

## நாமக்கல் மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்

## வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆர்.புதுப்பாளையம் கிராமம், ச.எண்-**152/1,2A1,4,153/1A4**- ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

| | | |
|---|---|---|
| அளவு | : | 1:400 (அ) 1"=33'0" |
| கோப்பு எண் | : | NKL/G9U23629/26371/2024 |
| இணையதள விண்ணப்பம் எண் | : | G9U23629 |

வ

**I குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 3.665 ஏக்கர்(அ) 14832.25 சதுர.மீ |
| சாலையின் மொத்தப்பரப்பு | : | 4606.41 சதுர.மீ |
| கோரிய மனைகள் | : | 53 |
| ஒதுக்கிய மனைகள் | : | 53 (E.W.S மனைகள் உட்பட) |

மனைப்பிரிவு எல்லை ..........

உத்தேச சாலை ..........

நிலையில் உள்ள சாலை ..........

**II பொது ஒதுக்கீடு :**

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| சாலை மொத்தப்பரப்பு (மூலைமுடக்கு உட்பட) | : | 4606.41 சதுர.மீ |
| பூங்கா-1 பரப்பு | : | 944.88 சதுர.மீ |
| பூங்கா-2 பரப்பு | : | 304.67 சதுர.மீ |
| பூங்காவின் மொத்த பரப்பு | = | 1249.55 சதுர.மீ (12.20%) |

பொது உபயோகம் (TNCDBR 47(8) ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு):

| | | |
|---|---|---|
| I. பொது உபயோகம் | : | 122.00 சதுர.மீ (1.19%) |
| II. மின்பகிர்மானம் (TANGEDCO ஒதுக்கீடு) | : | 97.65 சதுர.மீ (0.95%) |

ஒதுக்கீடுகள் : (விற்பனைக்குரியவை)

E.W.S மனைகளின் பரப்பளவு : 1026.45 சதுர.மீ (10.03%)

E.W.S மனைகளின் : 35-49

மூலை முடக்கு : (10.00 மீ) அகல சாலை வரை 1.5 x 1.5 மீ விடப்பட வேண்டும்

**III நிபந்தனைகள் :**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய கொள்ள வேண்டும்.
2. அரசானை எண் 181-ன், வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள் 19.12.2020-ன் படி உள்ள உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதின்பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் / ஆணையர், அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில்(கிரயப்பத்திரம், குத்தகை பத்திரம்,பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்து தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனமதி செல்லத்தக்கத அல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் செல்லுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட் வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்
13. அரசானை எண் 18,16 ந.நி (ம) கு.வ.துறை நாள் 04.02.2019 (ம) 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் பொருத்தும்.
14. குறைந்த வருவாய் பிரிவினற்களுக்கான E.W.S மனைகள் 35-49 வரையிலான மனைகளை மனைஉட்பிரிவு / மனை ஒருங்கிணைப்பு / மனை உபயோக மாற்றம் செய்தல் கூடாது.மேலும் 9.0மீ மற்றும் 7.0 மீ அகல சாலையில் அமையும் மனைகளுக்கு கட்டிட வரம்பு 1.0மீ பொருந்தும்.

SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO : 118 /2024

Signature valid

தே.புவனேஸ்வரி,
அளவர் / உதவி வரைவாளர்

செ.சந்தியா,
வரைவாளர் நிலை-II

பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II

E-SIGN
உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.

Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2024.05.07 18:56:22